தமிழ்நாடு அரசு – இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணிகை

திருத்தணிகை வட்டம், திருவள்ளூர் மாவட்டம் – 631 209.

**ந.க.எண்.2415/2021/அ1/நாள் : 12.01.2022**

## வேலை வாய்ப்பு கோரும் விளம்பர அறிவிப்பு

## தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிபள்ளிக்கான ஆசிரியர்கள் தேர்வு செய்தல்

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணிகை வட்டம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் புதியதாக ஏற்படுத்தப்படவுள்ள தவில் மற்றும் நாதஸ்வரம் பயிற்சி பள்ளியில் நாதஸ்வர ஆசிரியர் மற்றும் தவில் ஆசிரியராக பணியாற்ற மாதம் **1–க்கு** ஒப்பந்த ஊதியம் ரூ.35,000/–ம் என்ற அடிப்படையில் நியமனம் செய்ய தகுதியுள்ள இந்து மதத்தை சார்ந்த நபர்களிடமிருந்து **16.02.2022 – மாலை 5.45–மணி வரை** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. **கல்வித் தகுதி** – தமிழில் எழுதவும் படிக்கவும், இசைக் கருவிகளை வாசிப்பதில் சான்றிதழ், யாதொரு சமய நிறுவனங்கள் அல்லது யாதொரு அரசு நிறுவனங்கள் அல்லது ஏனைய யாதொரு அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் நடத்தப்படும் நாதஸ்வரம்/தவில் பள்ளிகளில் மூன்றாண்டுகள் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். "வாத்யவிசாரதா" சான்றிதழ் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். **வயது** – இந்த விளம்பர அறிவிப்பு அன்று (12.01.2022) 35 வயது பூர்த்தி அடையாதவராக இருத்தல் வேண்டும். இதர விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் வந்து கேட்டு தெரிந்து கொள்ளலாம். மேலும் திருக்கோயிலின் இணையதளத்தில் **https:/hrce.tn.gov.in** என்ற முகவரியில் கல்வித்தகுதி, வயது, மாதிரி விண்ணப்பபடிவம் மற்றும் இதர நிபந்தனைகளை பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம்.

**சி. லட்சுமணன்**, எம்.எஸ்சி., எம்.எல்., எம்.பி.ஏ.,
**தக்கார்**

**அ.தி. பரஞ்ஜோதி**, எம்.காம், பி.எல்.,
**இணை ஆணையர்/செயல் அலுவலர்**

செ.ம.தொ.இ./ 36 /வரைகலை/2022

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"